DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI
**CC.No.138/2020**

Deposition of witness for Prosecution அ.சா.3

| | | |
|---|---|---|
| பெயர் | : | மகாலிங்கம் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | அர்சுணன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 04.03.2026

எதிரி ஆஜர் இல்லை. அவரைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் பட்டமங்களத்தில் வசித்து திருப்பூரில் பனியன் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன அர்சுணன் என் அப்பா. புகார்தாரர் மகாபாண்டி எனக்கு தம்பி. கடந்த 12.05.2019 ம் தேதி மாலை 4.30 மணியளவில் என் தந்தை CK மங்களத்தில் இருந்து பால் கொண்டு வரும்போது தனியார் ஆம்புலன்ஸ் என் அப்பா மீது மோதியது. அதில் என் தந்தைக்கு கை, காலில் காயம் ஏற்பட்டு காதில் ரத்தம் வந்துவிட்டது. பிறகு என் தந்தையை திருவாடனை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். என் தந்தை மருத்துவமனையில் இறந்துவிட்டார். விபத்து

ஏற்படுத்திய ஆம்புலன்சை யார் ஓட்டி வந்தார்கள் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் அரசு மருத்துவமனையில் சென்றுதான் என் தந்தையை பார்த்தேன் என்று சொன்னால் சரிதான். விபத்து இழப்பீடு பெறுவதற்காக என் தம்பி கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,

DEVAKOTTAI

**CC.No.138/2020**

Deposition of witness for Prosecution அ.சா.4

| | | |
|---|---|---|
| பெயர் | : | மகாதேவி |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | கணேசன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 04.03.2026

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் உரத்தூரில் வசித்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன அர்சுணன் என் அப்பா. கடந்த 12.05.2019 ம் தேதி எனது அப்பா எங்கள் வீட்டிற்கு வந்தார். என் அப்பா இரு சக்கர வாகனத்தில் செலுகை அருகே வரும்போது திருச்சியிலிருந்து இராம்நாடு நோக்கி வந்த ஆம்புலன்ஸ் என் அப்பா சென்ற இரு சக்கர வாகனத்தில் மோதிவிட்டது. அதில் என் அப்பாவிற்கு நெஞ்சில் காயம் ஏற்பட்டது. அவரை திருவாடனை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். அங்கு அவர் இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

**நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் அரசு மருத்துவமனையில் சென்றுதான் என் தந்தையை பார்த்தேன் என்று சொன்னால் சரிதான். விபத்து இழப்பீடு பெறுவதற்காக என் சகோதரர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.138/2020**

Deposition of witness for Prosecution அ.சா.5

| | | |
|---|---|---|
| பெயர் | : | இராமநாதன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | முத்தையா |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 04.03.2026

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் உரத்தூரில் வசித்து வருகிறேன். ஒரு 5 ஆண்டுகளுக்கு முன்பு செலுகை அருகே இராமநாதபுரம் ரோட்டில் நடந்த விபத்து தொடர்பாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து கையெழுத்து போட சொன்னார்கள் நான் போட்டு கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி பார்வை மகஜர் அ.சாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

போலீசார் விசாரித்த இடம் பழைய தேசிய நெடுஞ்சாலையோ, புதிய தேசிய நெடுஞ்சாலையா, யாருடைய வீட்டு அருகில் அல்லது கடைக்கு அருகில் என்று

குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால், பழைய தேசிய நெடுஞ்சாலை யாருடைய வீடு , யாருடைய கடை அருகில் உள்ளது என்று சொல்ல இயலாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் நீதிமன்றத்தில் வந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். இறந்துபோன அர்சுணன் எனக்கு சம்பந்தி. விபத்து இழப்பீடு பெறுவதற்காக புகார்தாரர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.